விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 162 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 16 செவ்வாய்க்கிழமை (30.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



**- பேராசிரியர்கள் ஒன்றிணைந்தால் -**

## வடக்கு, கிழக்கு, மலையக கல்வியை உச்சத்துக்கு கொண்டுவர முடியும்

### கலாநிதி ஆறு.திருமுருகன்



(யாழ்ப்பாணம்)

பேராசிரியர்கள் ஒன்றிணைந்து செயற்படுவார்கள் என்றால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை கல்வியால் உச்சத்திற்குக் கொண்டு வர முடியும் என செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

12

**வற்றாப்பளை பொங்கல்**

## சிறப்பாக இடம்பெற்ற தீர்த்தம் எடுக்கும் உற்சவம்



11

**யாழில் திடீர் சோதனை**

## முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகள்

### 5 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் நேற்று சுன்னாகம், அச்சுவேலியில் உள்ள பல வியாபாரமையங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அவ்வேளையில் வியாபாரிகளினால்

11

### பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக

# 350 மில்லியன் டொலர் கடனுதவிக்கு அனுமதி

## ஆசிய அபிவிருத்தி வங்கி

(கொழும்பு)

**ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு வரவு செலவு திட்ட ஆதரவை வழங்குவதற்காக 350 மில்லியன் அமெரிக்க டொலர் விசேட கொள்கை அடிப்படையிலான கடனுதவிக்கு அனுமதி வழங்கியுள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் நாட்டிற்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதியால் தொகுக்கப்பட்ட நிதி உதவியின் ஒரு பரந்த தொகுப்பின் ஒரு பகுதியாக இந்த திட்டம் உள்ளது என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், பொருளாதார மீட்சி மற்றும் நிலையான அபிவிருத்திக்கு அடித்தளம் அமைப்

12

## யாழில் கோர விபத்து இளைஞன் பலி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர் பகுதியை அண்மித்த பகுதியில் நேற்று திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை

11

## மத நல்லிணக்கத்துக்கு அவதூறு ஏற்படுத்தினால் கடும் நடவடிக்கை

### ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை



(கொழும்பு)

மத நல்லிணக்கத்திற்கு அவதூறு ஏற்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அந்தவகையில் மத நல்லிணக்கத்திற்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வரும் குழுக்களை விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்காக விசேட பொலிஸ் குழு வொன்றை அமைக்குமாறும் ஜனாதிபதி கூறியுள்

11

## கிளிநொச்சியில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இருந்து தருமபுரம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த கப்ரக வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் இருவர் படுகாயம் அடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

11

**யாழ்ப்பாணத்திலிருந்து**

## கதிர்காமத்துக்கு யாத்திரை சென்ற முதியவர் பலி



(கொழும்பு)

கதிர்காமத்திற்கு சந்நிதியில் இருந்து பாதயாத்திரை மேற்கொண்டு மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை வந்தடைந்த யாத்திரிகர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை ஆலயத்தில் உயிரிழந்துள்ளதாக மட்டு தலைமை

12

## வடக்கில் உணவு பாதுகாப்பின்மை உயர்மட்டத்தில்

### ஐ.நா அதிர்ச்சித் தகவல்

7 ஆம் பக்கம் பார்க்க

## 843 பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடு நீக்கம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டை தளர்த்தியதுடன் சுமார் 843

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# கப்பல் விபத்து

# இந்திய அரசாங்கம் ஒருபோதும் நஷ்டஈடு கோரவில்லை

## நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

இந்திய அரசாங்கத்தினால் நஷ்டஈட்டு தொகை ஒன்றை கோரியதாக நான் எந்த சந்தர்ப்பத்திலும் தெரிவித்ததில்லை.

ஆனால் நியூ டயமண்ட், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் ஆகிய இரண்டு கப்பல்களின் பாதிப்பை கட்டுப்படுத்துவதற்காக இந்திய கடற்படைக்கு ஏற்பட்ட செலவை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறே இந்திய உயர்ஸ்தானிகர் கோரி இருந்தார் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நியூ டயமண்ட் கப்பலில் ஏற்பட்ட தீ அணைத்தல் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்டுக்கொண்டிருந்த அழிவின்போது எமது நாட்டின் கோரிக்கைக்கமைய இந்திய அரசாங்கத்தினால் கடற்படையை தந்துதவியதன் மூலம் அவர்களுக்கு ஏற்பட்ட செலவை மீண்டும் பெற்றுக்கொள்ள மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கை தொடர்பாக நீதி, சிறைச்சாலைகள் நடவடிக்கை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நியூ டயமண்ட் கப்பலில் ஏற்பட்ட தீ அணைத்தல் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட அழிவின் போது அதனை கட்டுப்படுத்துவதற்காக எமது கடற்படையுடன் எமது கோரிக்கைக்கமைய இந்திய கடற்படையின் உதவியை வெற்றிகரமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தோம்.

அத்துடன் இந்திய அரசாங்கத்தினால் நஷ்டஈட்டு தொகை ஒன்றை கோரியதாக நான் எந்த சந்தர்ப்பத்திலும் தெரிவித்ததில்லை. என்றாலும் இந்திய கடற்படையினை பயன்படுத்தியதன் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்ட செலவீனத்தை மீள பெற்றுக் கொள்ளல் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு இந்திய உயர்ஸ்தானிகரால் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி இரண்டு கடிதங்கள் ஊடாக நீதி அமைச்சர் என்ற வகையில் எனக்கும் வெளிவிவகார அமைச்சருக்கும் அறிவுறுத்தினார் என மேலும் தெரிவித்தார். (4,7,9)


## கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

### அறிவித்தல்

**அன்பார்ந்த பொது மக்களுக்கு!**

யாழ்ப்பாணம் இலக்கம் 144, பிறவுண் வீதியிலுள்ள கல்யாண மாலை என்பது சமூக சேவை நோக்குடன் இயங்கும் சர்வதேச இலவச திருமண சேவை அமைப்பாகும்.

இங்கு நிலைய நிர்வாகச் செலவுகளின் பொருட்டு பதிவுக் கட்டணம் மட்டுமே அறவிடப்படுகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் நிலைய நிர்வாகச் செலவு, காகிதாதிகள், தொலைபேசி மற்றும் மின் கட்டணங்கள் அதிகரித்து இருப்பதன் காரணமாக எதிர்வரும் **01.06.2023** இலிருந்து பதிவுக் கட்டணம் **நான்காயிரம்** ரூபாவாக **(4,000/=)** அறவிடப்படும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**நிர்வாகம்**
**கல்யாண மாலை**





## வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன்

## ஆலய வருடாந்த பொங்கல் விழா

**02.06.2023 வெள்ளிக்கிழமை**

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

*அம்பிகை அடியார்களே!*

வன்னி விளாங்குளம் பதியில் பன்நெடுங்காலமாக கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் சோபகிருது வருஷம் வைகாசித் திங்கள் 19ம் நாள் (02.06.2023) வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் விஷேட அபஷேகமும் அலங்கார பூஜைகளும் நடைபெறும். இரவு 09.00 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்கள், பூக்கள், பூமாலைகள் போன்றவற்றை தந்துதவுமாறு வேண்டுகின்றோம். வழமை போல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எமது சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிதி சேகரிக்கும் தொண்டர்கள் தங்கள் இல்லம் நாடி வருவார்கள். அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்களால் இயன்றளவு நிதி வழங்கி பொங்கல் விழாவைச் சிறப்பாக நிறைவு செய்வதோடு அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**குறிப்பு:-**

1. பொங்கல் தினத்தன்று விஷேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
2. பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.
3. பொங்கல் தினத்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 31.05.2023 காலை 10.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தினைச் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக் கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப் படுவீர்கள் என்பதை அறியத் தருகின்றோம்.

- உணவு கையாள்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ், நீர்ப்பகுப்பாய்வுச் சான்றிதழ், இவ்வாண்டுக்குரிய பிரதேச சபை அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
- உணவு கையாள்பவர்கள் ஏப்ரன், தொப்பி என்பன அணிதல் வேண்டும்.
- மூடியுடன் கூடிய கழிவகற்றல் தொட்டி, வெள்ளைத்தாள் பாவனை, உணவு இடுக்கிப் பாவனை போன்ற சுகாதார விதிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபை,
வன்னிவிளாங்குளம், மாங்குளம்.

(C-6644)


## துஷ்பிரயோகங்களால்

# பாதிக்கப்படும் சிறுவர்களை ஊடகங்களில் வெளிப்படுத்துவதை தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் குற்றவாளிகளை ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்துவதால் பாரிய சமூகச் சிக்கல்கள் பல உருவாகியுள் ளதாகவும், அதனைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சிறுவர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி விஜேரத்ன வலியுறுத்தினார்.

சிறுவர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியத்தின் கூட்டம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விசேடமாக சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களின் போது சிறுவர்களின் அடையாளங்கள் ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தப்படுவதால் சம்பந்தப்பட்ட சிறுவர்களின் வாழ்க்கைக்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்படுவதாக ஒன்றியத்தின் உறுப்பினர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

சிறுவர்கள் தொடர்பான செய்திகளை வெளியிடும் போது தமது நிறுவனம் தரத்தை பின்பற்றுவதாக அரச ஊடகங்களின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அதற்கமைய, இது தொடர்பில் மேலும் கலந்துரையாடுவதற்கு ஒன்றியத்தின் அடுத்த கூட்டத்துக்கு அனைத்து ஊடகங்களுக்கும் அழைப்புவிடுக்க இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக, இந்நாட்டில் சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களின் நிலைமையை உயர்த்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, குறைந்தபட்ச தரநிலைகளில் உரிய நிறுவனங்களை நடத்துதல், சிறுவர்களை பராமரிக்கும் பணியாளர்களின் பற்றாக்குறை, இந்நிறுவனங்களின் சுகாதாரப் பராமரிப்பு இன்மை, சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்புக்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் சிறுவர் இல்லங்களை முறையான கண்காணிப்பின் கீழ் கொண்டுவருவது போன்ற விடயங்கள் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (4,7,9)

## ஞானக்குழந்தை இல்லங்களின் பேச்சு திறன்காணும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

ஞானக்குழந்தை இல்லங்களின் வருடாந்த பேச்சுத் திறன் காணும் வைபவம் இன்று காலை 8.30 மணிக்கு ராஜா கிறீம் ஹவுஸ் ஹம்சிகா மண்டபத்தில் பாலர் கல்வி கழகத் தலைவர் கலாநிதி. லயன் S.P.காசிநாதன் தலைமையில் நடைபெறும். (4,7,9)

# யானை தாக்கியதில் வயோதிபர் உயிரிழப்பு

திருகோணமலை - கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அடம்பன கோணாபெந்திவெவ பகுதியில் யானை தாக்கியதில் வயோதிபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த உக்குபண்டாகே ஜயரத்ன (64 - வயது) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோமரங்கடவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

## இலங்கையில் அறிமுகமாகும் புதிய வகை முச்சக்கரவண்டி

(கொழும்பு)

இலங்கையில் 7 பேர் பயணம் செய்யும் வகையில் இலத்திரனியல் முச்சக்கரவண்டி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த இலத்திரனியல் முச்சக்கர வண்டி ஒரு முறை சார்ஜ் செய்தால் 100 கிலோமீட்டர் வரை பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த இலத்திரனியல் முச்சக்கர வண்டியில் பயணிக்க 150 ரூபா அளவு மாத்திரமே செலவாகும் என அதன் உரிமையாளர் மில்டன் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த வாகனத்தை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (4,7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹியங்கனை விகாரை வளாகத்தை புனித பூமியாக பிரகடனப்படுத்தும் பத்திரம் ஜனாதிபதியால் கையளிப்பு



(மஹியங்கனை)

வரலாற்றுச் சிறப்புமிக்க மஹியங்கனை விகாரை வளாகத்தை புன்னியஸ்தலமாக பிரகடனப்படுத்தும் ஸ்ரீ சன்னஸ் பத்திரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மஹியங்கனை ரஜமஹா விகாரையின் விஹாராதிபதி மஹோபாத்யாய உருலேவத்தே தம்மரக்கித்த தேரரிடம் நேற்று முன்தினம் கையளித்தார். (நி)

## வலுவடையும் ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்கட்கிழமை ரூ.298 ஆக இருந்த டொலரின் பெறுமதி கடந்த வெள்ளிக்கிழமை ரூ.292 ஆக சரிவடைந்தது.

இதன்படி நேற்றைய தினம் டொலரின் கொள்வனவு விலை 289.89 ரூபாவாகவும் விற்பனை விலை 303.26 ரூபாவாகவும் பதிவாகியுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (நி)

# இலங்கை மருத்துவ பீடங்களுக்கு இடையிலான வினாடி வினாப்போட்டி

## யாழ்.பல்கலைக்கழகம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மருத்துவ பீடங்களுக்கு இடையிலான உயர் குருதி அழுத்த வினாடி வினாப் போட்டி 2023 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் குழு வெற்றி பெற்றுள்ளது.



வைகாசி மாதம் உயர் குருதி அழுத்த விழிப்புணர்வு மாதமாகவும் மே 17 ஆம் திகதி உலக உயர் குருதி அழுத்த தினமாகவும் உலக உயர் குருதி அழுத்த கழகத்தால் கொண்டாடப்படுகிறது. இந்த முக்கியமான மாதத்தை நினைவுகூரும் வகையில், "பேராதனை உயர் குருதி அழுத்த ஆராய்ச்சி மையம்" ஏற்பாடு செய்த மருத்துவ பீடங்களுக்கு இடையிலான வினாடி வினாப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம், ராஜரட்டை, கிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய மருத்துவ பீடங்களின் இறுதியாண்டு மருத்துவ மாணவர்கள் குழு இதில் கலந்து கொண்ட நிலையில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மருத்துவ மாணவர் அணி 2023 ஆம் ஆண்டிற்கான வினாடி வினாப் போட்டியின் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி மாணவர்களுக்கு தகுந்த ஆலோசனைகளையும் தேவையான வசதிகளையும் பேராசிரியர் இரா. சுரேந்திரகுமாரன், பேராசிரியர். தி.குமணன், பேராசிரியர். ந.சுகந்தன், வைத்திய கலாநிதி வா.சுயனிதா மற்றும் வைத்திய கலாநிதி பிரம்மா தங்கராஜா ஆகியோர் வழங்கினர். (நி-6-33)

# பௌத்த தேரர்களை நோக்கியும் இனி சட்டம் பாய வேண்டும்

## மனோகணேசன் வலியுறுத்து

(கொழும்பு)

இன மத வெறுப்பை கக்கி வரும் பௌத்த தேரர்களை நோக்கியும் சட்டம் இனி பாய வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தனது சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளதாவது,

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் சமூக பேச்சாளர் நதாஷா எதிரிசிங்க ஆகியோருக்கு எதிராக அரசின் சட்டம், ஒழுங்கு விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.


சட்டம், ஒழுங்கு, நீதி துறை தன் கடமையை செய்யட்டும். அதேவேளை இந்நாட்டில் இனவாத வெறுப்பு பேச்சுகளை தொடர்ந்து இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதங்களுக்கு எதிராக பேசி வரும் பௌத்த பிக்குகளை நோக்கியும் இதே சட்டம், ஒழுங்கு, நீதி துறை பாய வேண்டும் என்றார்.

எந்தவொரு மத தலைவரும், செயற்பாட்டாளரும், தமது இனவாத, மதவாத நடவடிக்கைகள் தொடர்பில் இனிமேல் சட்டத்தின் முன் விலக்கு பெற கூடாது எனவும் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

பாஸ்டர் ஜெரோம், முற்போக்கு பேச்சாளர் நதாஷா ஆகியோரை சுற்றி வளைத்திருக்கும் பொலிஸ், நீதிமன்ற சட்டங்கள் என்பன நாட்டில் இனவாத வெறுப்பு பேச்சுகளை தொடர்ந்து பேசி வரும் பௌத்த பிக்குமார்களுக்கு எதிராகவும் பயன்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் இனிமேல் இந்நாட்டில், சட்டம் ஒருபக்க சார்பாக இருக்க முடியாது எனவும் மனோகணேசன் சுட்டிக்காட்டியுள்ளார். (4,7,9)

## புத்தர் சிலை உடைப்பு



(காலி)

கடந்த காலங்களில் இலங்கையின் பல பகுதிகளில் உள்ள வழிபாட்டுத்தலங்கள் மீதான அத்துமீறல்கள் வலுவாக அதிகரித்திருந்தது.

இந்த நிலையில், தற்போது புத்தர் சிலை ஒன்றின் மீது கை வைக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின், இமதுவ அகுலுகஹா கல்குவாரிக்கு அருகில் கட்டப்பட்டுள்ள புத்தர் விகாரையின் கண்ணாடியை யாரோ உடைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலையை கவிழ்த்துள்ளதாக இமதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழர் பகுதிகளில் உள்ள, தமிழ் மக்களின் புராதன வழிபாட்டுத் தலங்கள் மீது தொடர்ச்சியான அத்துமீறல்கள் இடம்பெற்றிருந்தாலும் தென் பகுதியில் உள்ள பெரும்பாலான பௌத்த விகாரைகள் மற்றும் அங்குள்ள சிலைகள் எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படாமல் பாதுகாப்பாகவே இருந்து வந்தன.

இப்படி இருக்கையில் நேற்று முன்தினம் புத்தர் சிலையை கவிழ்த்துள்ள சம்பவமானது மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# சட்டவிரோத மது உற்பத்தியில் ஆபத்தான இரசாயனங்கள் கலப்பு

## மூலப்பொட்களின் கலவை குறித்து எச்சரிக்கை

(கொழும்பு)

காட்டு யானைகளை அடக்குவதற்கு பயன்படுத்தப்படும் ட்ரான்குலைசர்கள் உட்பட பல ஆபத்தான இரசாயனங்கள், சட்டவிரோத மது உற்பத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களில் உள்ளதாக மதுபான உரிமம் வைத்திருப்போர் சங்கம் எச்சரித்துள்ளது.

வரி உயர்வை தொடர்ந்து, இலங்கையர்கள் பலர் சட்டவிரோத மது உற்பத்தியை நாடுவதாகவும் இதன் காரணமாக சட்டவிரோத மது உற்பத்தி அதிவேகமாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் மதுபான விற்பனையும் கணிசமான அளவு குறைந்துள்ளதாகவும் இலங்கை மதுபான உரிமம் வைத்திருப்போர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை வரிகள் குறைக்கப்பட்டால், அரசாங்கம் தனது வருமானத்தை தற்போதைய 170 பில்லியன் ரூபாவிலிருந்து 300 பில்லியன் ரூபாவாக அதிகரிக்க முடியும் என்றும் அச்சங்கத்தின் தலைவர் டலஸ் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (நி)

## பிராந்திய வானொலி நிலையங்களை மூடும் தீர்மானம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் கீழுள்ள பிராந்திய வானொலி நிலையங்களை இம்மாத இறுதியுடன் மூடுவதற்கு அரசாங்கம் மேற் கொண்டிருந்த தீர்மானம் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

பிராந்திய வானொலி நிலையங்கள் பல, சமூக, கலை, கலாசார விடயங்களுடன் தொடர்புபட்டுள்ளதாலும் அவை வருமானத்தை ஈட்டித் தரும் நிலையங்களாக இருப்பதாலும் உடனடியாக மூடாமல், அவற்றை மறுசீரமைக்கும் செயற்பாடுகளை ஆராயுமாறு ஜனாதிபதி ரணில் பணிப்புரை விடுத்துள்ளதாக தெரியவருகிறது. வடக்கின் யாழ்.எவ்.எம், கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். உட்பட்ட பல பிராந்திய வானொலி நிலையங்கள் இம்மாத இறுதியுடன் சேவைகளை நிறுத்தவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கன்னங்கராக்களின் வெற்றிக்கிண்ணம் - 2023 வேலணை மத்திய கல்லூரி எதிர் வயாவிளான் மத்திய கல்லூரிகளுக்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை வேலணை மத்திய கல்லூரியின் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வேலணை மத்திய கல்லூரியை 5:0 கணக்கில் வீழ்த்தி வயாவிளான் மத்திய கல்லூரி வெற்றியை தனதாக்கியது.

17 வயது பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் 4:3 என்ற தண்டல் உதைப்பு (பனாட்டி ) மூலம் வேலணை மத்திய கல்லூரியை வயாவிளான் மத்திய கல்லூரி வென்று கிண்ணத்தை சுவீகரித்தது.16 வயது ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் 1:0 என்ற கணக்கில் வேலணை மத்திய கல்லூரியை வயாவிளான் மத்திய கல்லூரி வெற்றி கொண்டு கிண்ணத்தை சுவீகரித்தது.

### கன்னங்கரா

# துடுப்பாட்ட வெற்றிக்கிண்ணத்தை

## சுவீகரித்தது வயாவிளான் மத்திய கல்லூரி



கன்னங்கராக்களின் வெற்றிக்கிண்ணம் 2023 இருபது-20 மென் பந்துக்கான துடுப்பாட்ட போட்டியில் வயாவிளான் மத்திய கல்லூரி கன்னங்கராக்களுக்கான வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

கடந்த வெள்ளிக்கிழமை வேலணை மத்திய கல்லூரியின் விளையாட்டுத் திடலில் இடம் பெற்ற இப் போட்டியில் வேலணை மத்திய கல்லூரியும் வயாவிளான் மத்திய கல்லூரியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய வேலணை மத்திய கல்லூரி 15.2 பந்துப் பரிமாற்றங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது.

130 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என துடுப்பெடுத்தாடிய வயாவிளான் மத்திய கல்லூரி 20 பந்துப் பரிமாற்றங்களின் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

இப்போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக வேலணை மத்திய கல்லூரி வீரர் துஷ்யந்தனும் சிறந்த களத் தடுப்பாளராக வேலணை மத்திய கல்லூரி வீரர் பிரியதர்சனும் சிறந்த பந்து வீச்சாளராக வயாவிளான் மத்திய கல்லூரி வீரர் வினிசிகனும் மற்றும் போட்டியின் ஆட்ட நாயகனாக வயாவிளான் மத்திய கல்லூரி வீரர் திரிசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2839

மதுமிதா




யுவன்




திலானி




அனோஜா




யுதேஷ்




பிரின்சிகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.
## நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

இப் பிரதேச சபையின் நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்:**

01. இப்பதவி முற்றிலும் தற்காலிகமானது.
02. இப்பதவிக்கு குறித்துரைக்கப்பட்ட வேதனமோ அல்லது படிகளோ கிடையாது.
03. ஆதனவரி அறிவித்தல் படிவங்கள், நிலுவைகளின் பெயரிலான அறிவித்தல் படிவங்களினை வரியிறுப்பாளர்களுக்கு நேரடியாக விநியோகித்தல் வேண்டும்.
04. சபைக்கு வருமதியாகவுள்ள ஆதனவரி நிலுவைகளை உரிய வரியிறுப்பாளர்களிடம் அறவீடு செய்தல்.

**தகைமைகள்:**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் கரைச்சி பிரதேச சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இதனை கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட **வதிவிடச் சான்றிதழ்** மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அல்லது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் **வாக்காளர் பட்டியலின்** மூலப் பிரதி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
02. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.
03. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று (12.06.2023) 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வயதெல்லைக்குள் அப்பாற்பட்ட விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
04. விண்ணப்பதாரி நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
05. ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
06. ஆதனவரி அறிவித்தல் படிவங்களினை மாத்திரம் விநியோகிப்பதாயின் பாதுகாப்பு வைப்பாக ரூபாய் 5000.00 ஐ செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும். அறிவித்தல் படிவங்கள் விநியோகிப்புடன் ஆதனவரி நிலுவைத் தொகைகளை அறவீடு செய்வதாயின் பாதுகாப்பு வைப்பாக ரூபாய் 50,000.00 ஐ செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை:**

01. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் கல்வித்தகைமை, தொழில் அனுபவம், வேலை மனப்பாங்கு என்பவற்றிற்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

01. கரைச்சி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் விடுமுறை நாட்கள் தவிர்ந்த அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை ரூபாய்.50 இனைச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
02. விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியினால் தெளிவாகப் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.
04. தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
05. ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்திற்குப் பின்னராகவோ அல்லது நியமனத்தின் போதோ முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.
06. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப முடிவுத் திகதியான 12.06.2023 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **"செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி"** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:- கிளிநகரம், கணேசபுரம், உதயநகர், கிருஸ்ணபுரம், பாரதிபுரம், திருவையாறு, கனகாம்பிகைக்குளம் ஆகிய வட்டாரங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**வேதனம்**

அறவிடப்படும் ஆதனவரி வருமான நிலுவைத் தொகையின் 10% தரகுப் பணமாக வழங்கப்படும். அத்துடன் விநியோகிக்கப்படும் ஆதனவரி அறிவித்தல் படிவம் ஒன்றிற்கு ரூபாய் 20 வீதம் வழங்கப்படும்.

**ப.பத்மகரன்,**
**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(கி-6641)

# இரண்டு அமைச்சரவை அமைச்சர்களின் பதவிகளில் விரைவில் மாற்றம்

(கொழும்பு)

எதிர்வரும் சில தினங்களில் இரண்டு அமைச்சரவை அமைச்சர்களின் பதவிகளில் மாற்றம் இடம்பெறவுள்ளதாக அரசியல் தரப்புகள் தெரிவிக்கின்றன.

ஜப்பானுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி தற்போது நாடு திரும்பியுள்ள நிலையில், இரண்டு அமைச்சுப் பதவிகளிலும் மிக விரைவில் மாற்றம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், அந்தப் பதவிகளுக்கு யார் நியமிக்கப்படுவார் என்பது குறித்து இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வின் சிரேஷ்டர்கள் அமைச்சுப் பதவிகளுக்காக காத்திருப்பதாகவும் அவர்களுக்கு இரண்டு அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவுள்ளதாக அரசியல் தரப்புகள் தெரிவித்துள்ளன. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கடந்த காலங்களில் பல தடவைகள் சிரேஷ்டர்களுக்கு அமைச்சுப் பதவிகளை கோரிய போதும் அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வில்லை. (நி)

# எக்ஸ்பிரஸ் கப்பலில் இருந்து மீண்டும் எண்ணெய்க் கசிவு

(கொழும்பு)

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தீயில் எரிந்து நாசமான "எக்ஸ் பிரஸ்பேர்ள்" என்ற கப்பலில் இருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு அருகில் எண்ணெய்க் கசிவு காணப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த எண்ணெய்க் கசிவு குறித்து மீனவர்கள் தேவையான அனைத்து அரசு நிறுவனங்களுக்கும் தகவல் அளித்துள்ளதாகவும் கசிவு மேலும் வளர்ச்சியடைந்தால், அது பெரிய கடல் மாசுபாட்டை ஏற்படுத்தக் கூடும் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

கப்பல் அழிக்கப்பட்ட போது, அதில் ஏறக்குறைய 1500 இரசாயன கொள்கலன்கள் மற்றும் ஒரு மெற்றிக் தொன் எரிபொருள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மதவாதக் கருத்துக்களை வெளியிட்ட சத்தாரதன தேரருக்கு விளக்கமறியல்

(இராஜாங்கனை)

இனங்களுக்கு இடையில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டதற்காக கைது செய்யப்பட்ட இராஜாங்கனை சத்தாரதன தேரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரை நேற்று கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மத நல்லிணக் கத்திற்கு அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டதாக இராஜாங்கனை சத்தாரதன தேரர் குற்றப் புலனா ய்வு திணைக்களத்துக்கு அழைத்து வரப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால், அவர் அநுராதபுரம் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டிருந்தார்.

இராஜாங்கனை சத்தாரதன தேரர், சமூக ஊடகங்களில் வெளியிடும் கருத் துக்களால், இனங்களுக்கிடையில் அமைதியின்மை ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவித்து கிடைக்கப்பெற்ற முறைப் பாட்டை கருத் தி ற கொண்டு, அவர் கைது செய்யப் பட டார்.

பாஹியன் கல சாகர தேரரினால் குறித்த முறைப் பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அவரை நீதி மன்றில் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக் கமறிய லில்வைக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 320 | 400 |
| தக்காளி | 350 | 320 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 180 | 200 |
| கோவா | 380 | 450 | 450 |
| கரட் | 380 | 400 | 450 |
| பூசணி | 90 | 80 | 100 |
| புடோல் | 200 | 150 | 300 |
| வாழைக்காய் | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 500 | 500 | 500 |
| வெண்டக்காய் | 160 | 120 | 250 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 160 |
| பயற்றங்காய் | 400 | 300 | 400 |
| லீக்ஸ் | 380 | 400 | 450 |
| பீற்றூட் | 550 | 320 | 500 |
| கறிமிளகாய் | 380 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 1000 |
| போஞ்சி | 450 | 550 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 350 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 120 |
| தேசிக்காய் | 350 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70-110 |
| இராசவள்ளி | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 650 | 400 | 500 |
| முள்ளங்கி | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 50 |
| வல்லாரை | 25 | 50 | 50 |
| சரப்பலா | 200 | 200 | — |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழில் முற்றுகையிடப்பட்ட விடுதி உரிமையாளர் உட்பட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பகுதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் கலாசார சீரழிவுகள் இடம் பெறுவதாக யாழ்.பொலிஸாருக்கு நேற்று கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் விடுதியில் சோதனை நடத்தியதில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த விடுதியில் சந்தேகத்திற்கு இடமானவர்களின் நடமாட்டங்கள் காணப்படுவதாகவும், அதன் ஊடாக அங்கு கலாசார சீரழிவுகள் இடம்பெறுவதாகவும் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் குறித்த விடுதியினை யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் முற்றுகையிட்டு சோதனையிட்ட போது , உரிய பதிவுகள் இன்றி விடுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் தனி அறைகளில் தங்கி இருந்த தெஹிவளை பகுதியை சேர்ந்த இரு பெண்களை கைது செய்துள்ளனர். அத்துடன் விடுதியின் முகாமையாளரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு பெண்களையும் முகாமையாளரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)



மரணத்தில் பூர்த்த மலையகம் 200 ஆவது வயது நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. கிராமிய உழைப்பாளர் சங்க தலைவர் நா.இன்பம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், மலையக மக்களின் வாழ்வியலின் துன்பியலை வெளிப்படுத்தும் 200 ஆண்டுகளின் நிலை பற்றிய நாடகம், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (படம்: மகாலிங்கம், சிவசாந்தன்)




கிளிநொச்சி தெற்கு வலயத்திற்குட்பட்ட கரைச்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 2023 ஆம் ஆண்டிற்கான மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகளின் இறுதி நிகழ்வு அண்மையில் றொட்றிக்கோ பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. (படம்- சுபேசன்)

# முருங்கைக்காய் திருட்டில் ஈடுபட்ட நபர் நையப்புடைப்பு

(கரணவாய்)
கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்பாக உள்ள முருங்கைக்காய் தோட்டக்காணிக்குள் கடந்த சனிக்கிழமை பட்டப்பகல் வேளையில் உள்நுழைந்து திருட முற்பட்ட நபரை கையும் மெய்யுமாக பிடித்து பொது மக்கள் நையப்புடைக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த நபர் பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்தவர் என தெரிய வந்துள்ளது.

குறித்த திருடனை பொலிஸார் கைது செய்து நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற போதிலும், தோட்ட உரிமையாளர் தனது முறைப்பாட்டை மீளப் பெற்றமையால் குறித்த நபரை பொலிஸார் விடுதலை செய்துள்ளனர். (நி-6-60)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

## யாழில் இடம்பெற்ற கலந்துரையாடல்



(அராலி)
அகில இலங்கை பொது மீனவர் சங்க சம்மேளனத்தின் உறுப்பினர்களுக்கும் யாழ். மாவட்டத்தின் அம்பாள் கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் அம்பாள் கடற்றொழிலாளர் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் அகில இலங்கை பொது மீனவர் சங்க சம்மேளனத்தின் தலைவரும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான நிஹால்கலப்பதி, தேசிய அமைப்பாளரும் தென் மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான ரத்தின கமகே, காரைநகர் அம்பாள் கடற்றொழில் சங்க தலைவர், சங்க உறுப்பினர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது இந்திய மீனவர்களது அத்துமீறிய செயற்பாடுகளால் இலங்கை மீனவர்களது தொழில் முதல்கள் அழிவது, இலங்கையில் குறிப்பாக வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (நி-6-104)



Rotaract jaffna midtown மற்றும் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி வடக்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இக் குருதிக் கொடை நிகழ்வில் பல இளைஞர் யுவதிகள் ,கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர். (படம்-சிவசாந்தன்)

## இலவச சித்திர பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)
புத்தசாசன,சமய மற்றும் கலாசார அமைச்சின் கீழ் இயங்குகின்ற சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தினால் தரம் 10 ஆம் ஆண்டு தொடக்கம் பல்கலைக் கழக மாணவர் வரையான ஆர்வமுள்ள மாணவர்களுக்கான சித்திரம் வரையும் பயிற்சிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி பயிற்சிகள் நடைபெறும்.

அத்துடன் மேலதிக தகவல்களைப் பெற 077 319 8446 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பாரம்பரிய உணவுத் திருவிழா



(அராலி)
யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பாரம்பரிய உணவுத் திருவிழா நேற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது சிறு முயற்சியாளர்களின் பாரம்பரிய உணவுகளான தோசை, அப்பம், ஒடியல் கூழ், குரக்கன் பிட்டு, பலகார வகைகள், பழங்கள், இளநீர், தானிய உணவுகள், நுங்கு, பழச்சாறுகள், எண்ணெய் வகைகள் உள்ளிட்ட பல வகையான உணவுகள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனையும் இடம்பெற்றது.

சிறு முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவித்து உற்பத்திகளை விளம்பரப்படுத்தல், நவீன யுகத்தில் இளைஞர், யுவதிகளிடையே ஏற்பட்டுள்ள விரைவு உணவு பழக்க வழக்கங்களை மாற்றி பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கத்தை ஏற்படுத்தி அவர்களை நோய் நொடிகளில் இருந்து பாதுகாத்தல் உள்ளிட்ட பல நல்லெண்ண நோக்கில் குறித்த உணவுத் திருவிழா நடைபெற்றது.

பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில், உதவிப் பிரதேச செயலர் செல்வகுமாரி நேசகுமார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சிறு தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர். (நி-6-104)

## ஸ்ரீ மூத்தநயினார் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)
ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் திருக்கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் ஜூன் மாதம் 17 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் உணவுப் பாதுகாப்பின்மை இன்னமும் உயர்மட்டத்திலே உள்ளது

## ஐ.நா அமைப்புகள் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

**கிளிநொச்சி,மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் நுவரெலியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உணவுப் பாதுகாப்பின்மை இன்னமும் உயர்மட்டத்திலேயே உள்ளது என ஐ.நா அமைப்புகள் தெரிவித்துள்ளன.**

தற்போது 3.9 மில்லியன் மக்கள் ( 17 வீதமானவர்கள்) மிதமான, மோசமான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர் கொண்டுள்ளனர் என தெரிவித்துள்ள ஐ.நா அமைப்புகள் கடந்த வருடம் ஜூன், ஜூலை மாதங்களில் இது 40 வீதமாக காணப்பட்டது எனத் தெரிவித்துள்ளது.

உணவு நுகர்வில் ஏற்பட்ட முன்னேற்றமே உணவு பாதுகாப்பில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு காரணம் என தெரிவித்துள்ள ஐ.நாவின் அமைப்புகள் உணவு விலைகள் குறைவடைந்துள்ளமையும் அறுவடை காலத்தில் விவசாய சமூகத்தினர் மத்தியில் காணப்பட்ட முன்னேற்றமும் இதற்குக் காரணம் என தெரிவித்துள்ளது.

இந்த சாதகமான மாற்றம் தென்படுகின்ற போதிலும் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ,நுவரெலியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உணவுப் பாதுகாப்பின்மை இன்னமும் உயர் மட்டத்திலேயே உள்ளது என ஐ.நா அமைப்புகள் தெரிவித்துள்ளன. (நி)

# சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துமாறு புலோப்பளை பிரதேச மக்கள் கோரிக்கை



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட பளை பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகரித்துள்ளதாக பளை மக்கள் தெரிவித்துள்ளனர்.

பளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட புலோப்பளை பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனால் கிராமமே மூழ்கிப் போகும் அபாயத்தில் உள்ளதாகவும் பொது மக்கள் கவலை தெரிவித்தனர்.

குறித்த சட்டவிரோத மணல் அகழ்வினால் கடல் நீர் உட்புகும் அச்சத்தில் உள்ளதாகவும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளதோடு குறித்த இடத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்தி தருமாறும் மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-6-316)



பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளுதல் தொடர்பில் அரசாங்கத்திற்கு மற்றும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு சிபாரிசு செய்யப்படும் பரிந்துரைகள் தொடர்பான கலந்துரையாடல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்)

# பாதுகாப்புத் தூண்களை மோதித் தள்ளிய பேருந்து



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ-9 வீதி திரேசம்மாள் கோவில் அருகில் நேற்று வீதிப் பாதுகாப்புத் தூண்களை இலங்கை போக்குவரத்து சபை பேருந்து மோதித் தள்ளிய சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதன்போது பயணிகள் எவருக்கும் பாரிய சேதமில்லை. எனினும் பேருந்தின் கதவு மற்றும் மிதிபலகை என்பன சேதமடைந்துள்ளன.

பூநகரிக்கு சென்று கொண்டிருந்த பேருந்தே தறிகெட்டு ஓடி வீதிப் பாதுகாப்புத் தூண்களை மோதியுள்ளது.

இந்நிலையில் பேருந்தில் இருந்த பயணிகள் அவதிப்பட்ட நிலையில், சற்று நேரத்தில் மாற்று பேருந்து வரவழைக்கப்பட்டு பயணிகள் பத்திரமாக அனுப்பி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# வவுனியாவில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் அடாவடி

(வவுனியா)

வவுனியா மரக்காரம்பளை பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த குழுவொன்று வீட்டை உடைத்து சேதப்படுத்தியுள்ளது.

நேற்று அதிகாலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருகையில் குறித்த குழு வீட்டின் பிரதான நுழைவாயில் கதவினை உடைத்து சேதப்படுத்தியதோடு வீட்டின் யன்னல்களை அடித்து நொறுக்கி சேதப்படுத்தி விட்டு தப்பித்து ஓடியுள்ளனர். வீட்டின் உரிமையாளர்கள் யாரும் இல்லாத சமயம் பார்த்து இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதே வேளை அருகில் காணப்பட்ட கண்காணிப்பு கமராவில் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்ட காட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன் உதவியுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6)

# இராசிபலன்

30.05.2023
வைகாசி 16, செவ்வாய்க்கிழமை
தசமி முற்பகல் 11.15 மணிவரை

அத்தம் பின்னிரவு 4.27 மணிவரை
சுபநேரம் -10.22-11.52 மணிவரை
இராகுகாலம்-2.52-4.22மணிவரை

சந்திராஷ்டமம் - பூரட்டாதி

வளவன்

**மேஷம்** — மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கடகம்** — பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நிதி நிலை உயரும் வாய்ப்புண்டு, நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** — புண்ணிய காரியங்களில் சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பலன் பெற வேண்டிய நாள்.

**மகரம்** — ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** — அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்** — குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டால் இன்பம் கூடும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

**விருச்சிகம்** — வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், விருந்தினர் வருகையுண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கும்பம்** — மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, விரயங்கள் கூடும், கடவுளை வழிபாட்டு காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**மிதுனம்** — வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொதுக் காரியங்களில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** — பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**தனுசு** — வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மீனம்** — வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**நன்றி கெட்டவனுக்கு நல்லது செய்வது கடலில் பன்னீரை தெளிப்பதற்குச் சமம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 191





ஆட வரும் பெண்டிரும் சிறுவர் சிறுமிகளும் உலாவி வருகின்றனர். தெருமுனைகளில் ஆங்காங்கு ஜனங்கள் கும்பல் கூடி நிற்கின்றனர்.

இப்போது அவ்வீதிகளில் பெரும்பாலும் ஆலய ஸ்தபதிகள், சிற்பக் கலைஞர்கள், சிவனடியார்கள், தேவார ஓதுவார்கள், அரண்மனை ஊழியர்கள்,. ஆலயப் பணியாளர்கள், கோயில்களில் சுவாமி தரிசனம் செய்யவும் திருவிழாக் காட்சிகளைப் பார்க்கவும் வெளியூர்களிலிருந்து வரும் ஜனங்கள் ஆகியோர் அதிகமாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

இன்றைக்கு ஏதோ திருவிழா போலக் காண்கிறது. வீதிகளில் அழகிய ஆடை ஆபரணங்கள் அணிந்து ஆட வரும் பெண்டிரும் சிறுவர் சிறுமிகளும் உலாவி வருகின்றனர். தெருமுனைகளில் ஆங்காங்கு ஜனங்கள் கும்பல் கூடி நிற்கின்றனர்.

அக்கும்பல்களுக்கு மத்தியில் ஏதேதோ வேடம் புனைந்தவர்கள் நின்று ஆடிப்பாடுகிறார்களே! சற்றுக் கவனித்துப் பார்க்கலாம். ஆம் இவர்கள் கிருஷ்ணனைப் போலவும் கோபாலர்களைப் போலவும் அல்லவா வேடம் புனைந்திருக்கிறார்கள்! இந்தக் கூட்டத்துக்கு நடுவில் ஒரு கிருஷ்ணர் ஒரு மலையைத் தூக்கிக் கொண்டு நிற்கிறாரே? அவரைத் தேவராஜனாகிய இந்திரன் வந்து வணங்குகிறானே?. இன்னொரு கூட்டத்தின் நடுவில் கிருஷ்ணனை நாலு முகங்கள் உள்ள பிரம்மதேவர் வந்து தோத்தரித்து வணங்குகிறாரே! ஆகா! இப்போது தெரிகிறது. இன்று ஸ்ரீஜயந்தி கண்ணன் பிறந்த நாள். அந்த விழாவைத் தான் ஜனங்கள் இவ்வளவு குதூகலமாகக் கொண்டாடுகிறார்கள். அங்கங்கே உறியடித் திருநாள் நடைபெறுகிறது. மஞ்சள் நீரை வாரி இறைக்கிறார்கள்.

நந்திபுர விண்ணகரத்துப் பெருமாள் கோவிலைச் சுற்றி இந்தத் திருவிழாக் கொண்டாட்டங்கள் அதிகமாக நடைபெறுகின்றன. இது என்ன?

"கண்டேன் கண்டேன் கண்டேன் கண்ணுக்கினியன கண்டேன்!"

என்று பாடுவது யார்? தெரிந்த குரலாயிருக்கிறதே! இதோ நமது பழைய சிநேகிதர் ஆழ்வார்க்கடியார் நம்பி சாக்ஷாத்காரமாக நிற்கிறார்! நின்று பாடுகிறார். அவரைச் சுற்றிலும் ஒரு கும்பல் கூடுகிறது. சிலர் பக்தி சிரத்தையுடன் கேட்கிறார்கள்.

வேறு சிலர் எகத்தாளம் பண்ணத் தொடங்குகிறார்கள். ஆழ்வார்க்கடியாரின் கைத் தடியினால் யாருடைய தலைக்குச் சேதம் நேருமோ என்று நாம் அஞ்சுகிறோம்.

விண்ணகரக் கோயிலின் வாசலில் ஒரு சலசலப்பு. வீதிப்புறத்தில் நிறுத்தியிருந்த ரதங்களும் பல்லக்குகளும் கோயில் வாசலுக்கு வருகின்றன. கோயிலுக்குள்ளேயிருந்து மாதரசிகள் சிலர் வருகிறார்கள். இப்பெண்மணிகள் பெரிய குலத்துப் பெண்டிராகவே இருக்க வேண்டும்.

ஆம் ஆம்! பழையாறை அரண்மனைகளில் வாழும் மகாராணிகளும் இளவரசிகளுந்தான் இவர்கள்.

எல்லாருக்கும் முதலில் 'பெரிய பிராட்டி' என்று நாடு நகரமெல்லாம் போற்றும் செம்பியன் மாதேவி வருகிறார். இவர் மழவரையர் குலப் புதல்வி சிவஞானச் செல்வரான கண்டராதித்தரின் பட்ட மகிஷி.

வயது முதிர்ந்த விதவைக் கோலத்திலும் இவருடைய முகத்தில் எத்தகைய தேஜஸ் ஜொலிக்கிறது! அவருக்குப் பின்னால் அரிஞ்சய சோழரின் பத்தினியான வைதும்பராயர் குலப் புதல்வி ராணி கல்யாணி வருகிறார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உயர்ந்த உள்ளம்



இவனை விட்டு வைத்தால் தன் ஆஸ்தான கவிஞர் பதவிக்கு ஆபத்துத் ஏற்பட்டு விடும் என்று பயந்தான். அவனால் இரவில் தூங்க முடியவில்லை. கண்களை மூடினாலே விமலனின் முகம் தான் தெரிந்தது.

எப்படியாவது அவனை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று முடிவு செய்தான். தன் கவிதையை பாராட்டாமல் அவன் விமர்சனத்தை பாராட்டுட்டுகிறாரே அரசர் என்று நினைத்த போது அவனுக்கு அரசர் மீது ஆத்திரம் வந்தது.

அன்று ராஜ சபை கூடிய போது அரசர் மகிழ்ச்சிகரமான அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

"தன் பிறந்த நாள் அன்று கவிதைப் போட்டி ஒன்று நடைபெறுகிறது. இந்த போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறுபவர்களுக்கு ஆயிரம் தங்கக் காசுகளும் வீடும் நிலமும் வழங்க இருக்கிறேன்.

அயல் நாடுகளில் இருந்தும் பல கவிஞர்கள் வர இருக்கின்றனர்," என்றார் அரசர்.

அதைக்கேட்டு அனைவரும் மகிழ்ச்சி அடைந்த போது பசுபதி மட்டும் உம் என்று இருந்தான். தான் போட்டியில் கலந்து கொண்டால் நிச்சயமாக வெற்றி பெற முடியாது.

காரணம், அந்த விமலன் விமர்சனம் செய்தே தன்னை அவமானப்படுத்துவான். தோல்வி அடைந்தால் தன் ஆஸ்தான கவிஞர் பதவி போய் விடும். இப்படி பல வித சிந்தனையில் வேர்த்துப் போனான் பசுபதி.

அரசனின் பிறந்த நாள் வந்தது. நாடே விழாக் கோலம் பூண்டது. மக்கள் அனைவரும் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியாக இருந்தனர்.

போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமா வேண்டாமா என்று முடிவெடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான் பசுபதி. வருவது வரட்டும் என்று போட்டியில் கலந்து கொள்ள முடிவு செய்தான் பசுபதி.

கவியரங்கம் ஆரம்பமாகி விட்டது. அரசர் சிம்மாசனத்தில் அமர்ந்து விட்டு கவிஞர்களை வாழ்த்தினார். பிறகு, கவிதைப் போட்டியை ஆரம்பிக்கலாம்," என்றார். பல கவிஞர்களும் தங்கள் கவிதைகளை அழகாகப் பாடினர். அதைக் கேட்டு அரசர் மகிழ்ச்சி அடைந்தார்.

அனைத்தையும் கவனித்துக் கொண்டு மௌனமாக இருந்தான் விமலன்.

அடுத்த படியாக ஆஸ்தான கவிஞன் பசுபதி கவிதை பாடுவார் என்ற அறிவிப்பு வந்த போது விமலன் சிரித்தான். அதைக் கவனித்த பசுபதிக்கு கடும் கோபம் வந்தது.

ஆனால், கோபத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் இருந்தான்.

பசுபதி எழுந்து அரசனை வணங்கி விட்டு கவிதை பாட தொடங்கினான். அரசர் உட்பட அனைவரும் பசுபதியை பாராட்டினர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நல்ல தலைவன் தான் தலைவன் என்பதை வார்த்தைகளால் அல்ல செயலால் உணர்த்துபவனாக இருக்க வேண்டும். - விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பௌத்தத்தின் அதிகாரத்தை குறைக்காத வரையில்...

மத சுதந்திரத்தைப் பேணப் புதிய சட்டம் அமுலாக்கப்படுமென புத்த சாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கூறியுள்ளார்.

புத்த சாசன அமைச்சரின் மேற்போந்த கருத்து எதனை மையப்படுத்தியதென்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இப்போது அவர் கூறுகின்ற மத சுதந்திரம் என்பது பற்றி உற்றுநோக்குவோமாயின், இலங்கையில் பௌத்தத்துக்கு அதீத சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையின் ஆட்சி மதமாக பௌத்தம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பௌத்த விகாரைகளை அமைத்தல், பௌத்த பீடங்களுக்கு நீதி உதவி வழங்குதல், பிரிவேனாப் பாடசாலைகளுக்கான உதவிகள் என அனைத்தும் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன.

இதற்கும் மேலாக, இந்த நாட்டின் ஆட்சித் தலைவர்கள் பௌத்த பீடாதிபதிகளை வீழ்ந்து வணங்குவதுடன் அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவே இருக்கின்றனர்.

இதையும் கடந்து பௌத்த பீடாதிபதிகளை மீறி எதனையும் செய்ய முடியாதவர்களாக ஆட்சியாளர்கள் இருக்கின்றனர்.

அதாவது மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற ஒரு ஜனநாயக அரசாங்கம் பௌத்த பீடங்களுக்குக் கட்டுப்பட்டு நிற்குமாயின், அந்த அரசாங்கத்தால் எந்தப் பயனும் ஏற்படமாட்டா.

தவிர, ஆட்சி மதமாக பௌத்தம் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில், பௌத்த மத நிகழ்வுகளின்போது, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலும் அலங்கார வளைவுகளை அமைப்பதிலும் படைத்தரப்பினர் முழுமையாக ஈடுபடுத்தப்படுகின்றனர்.

நாட்டின் பாதுகாப்புப் பணிக்காக அமர்த்தப்பட்ட படையினர் பௌத்த விகாரைகளில் இடம்பெறும் நிகழ்வுகளின்போது சோடனைகளை – அலங்கரிப்புக்களைச் செய்வதில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு படையினர் பௌத்த விகாரைகளின் தொண்டர்களாகச் செயற்படுவது தொடர்பில் கருத்துரைத்த நயினாதீவு நாகதீப விகாராதிபதி; படையினரின் பணி விகாரை அமைப்பதோ அல்லது வெசாக் நிகழ்வுகளின் போது அலங்கரிப்பதோ அல்ல.

அவர்கள் நாட்டின் பாதுகாப்பின் பொருட்டு நியமிக்கப்பட்டவர்கள்.

எனவே அவர்கள் தமது கடமையைச் செய்ய வேண்டுமே தவிர, பௌத்த மதப் பணிகளைச் செய்வது அவர்களின் பணியல்ல எனக் கூறியிருந்தார்.

இதேவேளை தமிழர்களின் பாரம்பரியமான வாழ்விடங்களில் தனியாருக்குச் சொந்தமான காணிகளைக் கபளிகரம் செய்து விகாரைகளை அமைக்கின்ற சட்டவிரோதச் செயலிலும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இவை ஒருபுறமிருக்க, மரபுரிமை என்ற பேரில் தொல்லியல் திணைக்களம் சைவ சமய வழிபாட்டு இடங்களை அபகரிக்கின்ற கொடுமையைச் செய்கின்றது.

நிலைமை இவ்வாறாக இருக்கையில் மத சுதந்திரத்தைப் பேண புதிய சட்டம் அமுலாக்கப்படும் என புத்த சாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கூறுவது எந்தவகையில் பொருத்தம் என்பதுதான் புரியவில்லை.

உண்மையில் இலங்கையில் மத சுதந்திரத்தைப் பேணுவதாக இருந்தால், பௌத்த மதத்துக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை, அதீத சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

# மாணவர்களின் வசதி நலன்களை கருதி பரீட்சைத் திணைக்களம் செயற்பட வேண்டும்

## ஜனாதிபதி அறிவுறுத்தல்

தாம் கல்வி கற்ற அன்றாட சூழலுக்கு மாற்றமான பரிச்சயமற்ற சூழலில் பரீட்சைக்கு முகம் கொடுப்பது மாணவர்களின் மன அமைதிக்கு தடையாக இருப்பதாகவும், எப்போதும் கல்வி அமைச்சும் பரீட்சை திணைக்களமும் தமது வசதிக்காக அன்றி மாணவர்களின் வசதி மற்றும் நலன் கருதி செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இதன்படி, குறைந்தது 75 மாணவர்களாவது பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றிருந்தால், அந்தப் பாடசாலையை பரீட்சை நிலையமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள பரீட்சை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஏதேனும் வசதிகளை வழங்க முடியுமாயின், அதற்காக அடுத்த சில நாட்களில், நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கல்வி அமைச்சின் செயலாளர், பரீட்சைகள் ஆணையாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

மாணவர்கள் தாம் கல்வி கற்கும் பாடசாலைக்குப் பதிலாக, வேறு பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததால் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக பெற்றோர்களும் மாணவர்களும் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஆராய்ந்ததில் தற்போது நிலவும் பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு பரீட்சை நிலையங்களை மட்டுப்படுத்த கல்வி அமைச்சும் பரீட்சை திணைக்களமும் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, மாணவர்களின் மன நிலையை நேரடியாகப் பாதிக்கும் என்பதால், இவ்வாறான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் குறைந்தது ஒரு வருடமாவது உரிய பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் அறிவித்த பின்னரே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார். (4,7,9)

## வவுனியாவில் வீடொன்று மர்மநபர்களால் சேதம்

வவுனியா - மரக்காரம்பளை பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த அடையாளம் தெரியாத நபர்கள் வீட்டை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

வவுனியா மரக்காரம்பளை பகுதியிலுள்ள வீடொன்றிற்குள் நேற்று அதிகாலை உள்நுழைந்த அடையாளம் தெரியாத நபர்கள் வீட்டின் பிரதான வாயிலை உடைத்து சேதப்படுத்தியதுடன், கதவுகள், யன்னல்களையும் அடித்து சேதப்படுத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த வீட்டில், உரிமையாளர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உரிமையாளர்கள் நேற்று காலை வீடு திரும்பிய போது உடைக்கப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்ததோடு,

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வீட்டிற்கு அருகில் உள்ள கண்காணிப்பு கமராவில் தாக்குதல் மேற்கொண்ட நபர்கள் தொடர்பான காட்சிகள் பதிவாகியுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4,7,9)

## இரண்டு வான்கள் மோதி விபத்து

### 12 பேர் காயம்

மின்னேரிய - ஹபரணை பிரதான வீதியின் மின்னேரிய புக்கையிரத நிலைய சந்தியில் ஒரே திசையில் பயணித்த இரண்டு வான்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற விபத்தில் 12 பேர் காயமடைந்து பொலன்னறுவை பொது வைத்தியசாலை மற்றும் ஹிகுராக்கொட பிராந்திய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சம்மாந்துறை நோக்கி பயணித்த வான் ஒன்றும், அனுராதபுரத்திலிருந்து சோமாவதியை நோக்கி யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன. (4,7,9)

## அரிசி, முட்டைகளை அதிக விலைக்கு விற்றால் உடனடி சட்ட நடவடிக்கை

நிர்ணய விலையினை மீறி அதிக விலைக்கு அரிசி மற்றும் முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் அதிக விலைக்கு அரிசி மற்றும் முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களை இனங்காண்பதற்காக விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் நிர்ணய விலையை மீறி அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்த பல வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது. (4,7,9)

## தங்கத்தின் விலையில் தொடர் வீழ்ச்சி

நாட்டின் பொருளாதார நிலைவரத்துக்கு அமைய தங்கத்தின் விலையும் ஏற்ற இறக்கங்களுடன் நாளாந்தம் பதிவாகி வருகின்றது.

அந்தவகையில், கடந்த சில நாட்களாக தங்கத்தின் விலையானது தொடர் வீழ்ச்சி கண்டு வருகிறது.

நேற்றைய தங்க விற்பனை நிலைவரப்படி, ஒரு அவுண்ஸ் தங்கத்தின் விலையானது 583,166 ரூபாவாக காணப்படுகின்றது.

இந்த நிலையில், 24 கரட் தங்கப் பவுண் ஒன்று நேற்றைய தினம் 164,600 ரூபாவாக பதிவாகியுள்ளது. அதேவேளை 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 150,950 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அத்துடன் 21 கரட் தங்கப் பவுண் ஒன்று 144,100 ரூபாவாக நேற்றைய தினம் பதிவாகியுள்ளது.

அதேசமயம், 24 கரட் தங்கத்தின் ஒரு கிராம் விலை 20,580 ரூபாவாகவும், 22 கரட் தங்கத்தின் ஒரு கிராம் விலை 18,870 ரூபாவாகவும், 21 கரட் தங்கத்தின் ஒரு கிராம் விலை 18,010 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

எனினும், ஆபரணத் தங்கத்தின் விலை இந்த விலைகளில் இருந்து மாற்றம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4,7,6)

## சா.தர பரீட்சைக்கு தோற்றும் மரண தண்டனைக் கைதி

மரண தண்டனைக் கைதி உட்பட 10 சிறைக் கைதிகள் இந்த ஆண்டு நடைபெறும் கல்விப் பொதுச் சாதரணதர பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

சாதாரண தரம், உயர் தரம் போன்ற பரீட்சைகளுக்குத் தோற்றும் கைதிகளின் எண்ணிக்கை முன்பை விட அதிகரித்துள்ளதுடன், கல்வியில் ஆர்வமுள்ள சகல கைதிகளுக்கும் சிறைச்சாலையில் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளமையே பிரதான காரணமாகும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை நேற்று ஆரம்பமாகியுள்ளதோடு எதிர்வரும் ஜூன் 8 ஆம் திகதி வரை நடைபெறுகிறன்றமை குறிப்பிடத்தக்கது. (4,7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- II

20

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்,
தவிசாளர், எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இவ்வாறு இலங்கையின் வடபகுதி மீன்பிடி உற்பத்தி நிலைமைகள் காணப்படுகின்றது. இவ்வாறு "tamil geography news" என்னும் இணையத்தில் "இலங்கையின் வடபகுதி மீன்பிடிக் கைத்தொழில் நடவடிக்கை" என்ற கட்டுரையில் கூறப்பட்டிருந்தது.

இவ்வாறு வடபகுதி மீன் உற்பத்திகள் அதிகரித்திருந்த போதும் தமிழக மீனவர்களின் ஊடுருவல் வடபகுதி மீனவர்களின் மீன்பிடித் தொழிலை வெகுவாகப் பாதித்துள்ளது. இலங்கை மீனவர்களின் மீன்பிடியில் தங்கூசிவலை, சுருக்கு வலை, மடிவலை என்பன இலங்கை அரசால் உத்தியோகபூர்வமாக தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்திய (தமிழக) மீனவர்களைப் பொருத்தமட்டில் அவை தடை செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் அதனையே பயன்படுத்துகிறார்கள்.

இந்திய (தமிழக) மீனவர்களின் இழுவைப்படகுகள் (ரோலர்கள்) இக்கண்டமேடைக்குள் உள் நுழைவதால், இந்த 200 மீற்றர் ஆழ நீர்த் தடாகத்தில் ஒரு விதமான பேரிரைச்சல் ஒலியை இது எழுப்புகிறது. (இழுவை வலையின் இரும்புக் கதவுகள் ஒலியை எழுப்புகின்றன.)


இதனால் மீனினங்கள் கரையில் இருந்து கலைந்தும் விடுவதுடன், பாதுகாப்புக்காக தரையோடு படுத்தும் இவர்களின் மடி வலை இழுவைக்குள் வகையாகவும் மாட்டுப்பட்டும் விடுகிறது. இவ்அசாதாரண நிலைமை, மீன்களின் இனவிருத்தியைக் கொடுமையாகப் பாதிப்பதோடு கரையோர மீன்பிடித் தொழிலையும் வெகுவாக நாசப்படுத்துகிறது.

தங்கூசி வலையின் கண்கள் "பிளேட்"டைப் போலக் கூர்மை கொண்டவை. இதில் அகப்படும் மீன்களைப் பிரித்தெடுப்பதில் மீனின் உடலைப் பாதுகாப்பதற்கான இயற்கையாக அமைந்துள்ள மீனின் இழையம் அதிக பாதிப்புக்கும் உள்ளாகுகிறது. சேதத்துக்கு உள்ளாகும் இம்மீன்களின் மேற்பரப்பு, நீருக்கு வெளியே பக்றீரியாக்களால் வெகுவாக பாதிப்புக்கு உள்ளாகியும் விடுகிறது. இதனால் அவை உடன் மீன்பாவனைச் சந்தையில் விலை போகாத தரம் குறைந்த மீன்களாக எளிதில் மாறியும் விடுகிறது.

தங்கூசி வலை ஆறேழு மாத தொடர் பாவனையின் பின்னர் பாவிக்க முடியாதும் போய் விடுகின்றன. இதன் பின்னர் இவைகள் கடலிலே அல்லது கரையோரச் சுற்றாடலிலோ போடப்பட்டும் (கைவிடப்பட்டும்) விடுகிறது. இதனால் கடலிலுள்ள உயிரினங்களும் கடலோரப் பறவைகளும் ஊர்வனங்களும் பாதிப்புக்கு உள்ளாகுகின்றன. இவ்வலைகள் எளிதில் உக்கிப் போக முடியாதவை என்பதால் இதன் பாதிப்புக்கள் நீண்டகாலத் தொடர் பாதிப்புக்களாகவே அமைந்தும் விடுகின்றன. இது கடலையும் சுற்றுச் சூழலையும் வெகுவாக மாசடையப் பண்ணுகிறது.


சுருக்கு வலையில் அகப்படும் மீன்கள், சின்னதில் இருந்து பெரியது வரை வளமாக மாட்டிக் கொள்கிறது. இவ்வகையான வலை கொண்டு பிடிப்பது உலகில் விரும்பத்தகாத ஒன்று. கடலில் மிதந்து வாழும் நுண்ணுயிர்த் தாவரங்கள், இவ்வலை வீச்சால் அழிந்தும் போவதால் இது கடலின் அடிப்படை உற்பத்தியை இல்லாமலே ஒழித்தும் விடுகிறது.

மடிவலை இழுவைப் படகுகள் பயன்படுத்தி செய்யப்படும் மீன்பிடி, கடலின் அடித்தளத்தோடு எல்லாவற்றையும் வழித்து அள்ளிச் செல்வதால், உலகில் விரும்பத்தகாத தடை செய்யப்பட்ட (அல்லது மட்டுப் படுத்தப்பட்ட) ஒரு மீன்பிடி முறையாகும். இழுவைப் படகு மீன்பிடியால் கடல் வளத்திற்கு ஏற்படும் தாக்கத்தை படம்-1 இல் காட்டுகின்றது.




தமிழகத்தில் இருந்து இலங்கைக்குள் அத்துமீறும் ரோலர்கள், எமது கண்டமேட்டுக்குள் நுழைகின்றன, அவர்களின் ரோலர் இலங்கைக் கடற்பரப்புக்குள் எதுவரை வர முடியுமோ அதுவரை வந்து மீன் பிடிக்கிறார்கள்.

அண்மையில் (ஜூன் 2022) முல்லைத்தீவு கடலில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டதை ஊடகங்கள் மூலம் பார்த்திருப்பீர்கள். இவ்வாறு வரும் ரோலர்கள் எமது கண்டமேடையின் நீர்ப் பிரதேச இனத்து இயற்கை வளங்கள் மற்றும் எமது வாழ்வாதாரம் அனைத்தையும் அழிப்பதால் இந்த நாசகார மூர்க்கத்தன மீன்பிடி முறையை கண்டமேடைகளில் ஒரு துளியளவேனும் அனுமதிக்க முடியாது




தமிழக மீனவர்களால் இலங்கைக் கடலில் அத்துமீறி மீன்பிடிக்கும் பகுதிகள் அம்புக்குறிகளால் காட்டப்பட்டுள்ளன
(அம்புக்குறிகளின் தடிப்பு ஊடுருவல் அளவைக் காட்டுகிறது)

என்பதே எமது வடபகுதி மீனவர்களின் நிலைப்பாடாகும். பொதுவாகவே இந்த மீன்பிடியை கடலை நேசிக்கும் எந்தவொரு மீனவனும்சரி, சராசரி மனிதனும் சரி விரும்பவே மாட்டான் என்பது யாவரும் அறிந்ததொன்று.

### தமிழக மீனவர்களின் ஊடுருவல் பற்றி இணையத்திலிருந்து.....

இலங்கையின் கடல் பிரதேசத்தின் பெரும் பகுதி வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குள்ளேயே உள்ளது. இலங்கையின் தேவைக்கான கணிசமான அளவு மீன் வடக்கு கிழக்கு மாகாண கடல் பிரதேசங்களிலிருந்தே பிடிக்கப்படுகிறது. ஆனால் யுத்தம் நடைபெற்ற காலத்தில் வடக்கு கிழக்கில் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக வடபகுதி மீனவர்கள் தமது தொழில்களை இழந்து பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

யுத்தம் முடிந்த பின்னர் மீளவும் தமது தொழிலை ஆரம்பித்திருக்கும் வடக்கு -கிழக்கு மீனவர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி வந்து தடை செய்யப்பட்ட சுருக்குவலை, இரட்டைமடி வலைகளை பாவித்து மீன்பிடிக்கும் தமிழ்நாட்டு மீனவர்களால் பெரும் பிரச்சினைகளும் அழிவுகளும் ஏற்பட்டு வருகிறது.

சுருக்கு வலை பற்றி கூறுவதாயின் அவ்வலையை இழுக்கும் போது சுருங்கி பை போன்று வட்ட வடிவில் இறுகிக் கொண்டே செல்லும் என்பதால் இதற்கு சுருக்குமடி வலை எனப் பெயர் வந்தது.

இவ்வலை கடலின் அடியில் 500 மீற்றர் வரை கீழே சென்று சிறிய மீன்குஞ்சுகள் முட்டைகள் தொடக்கம் அனைத்து கடல் வளங்களையும் அள்ளி வரும். இந்த வலையை சாதாரண படகுகளில் ஏற்றிச் சென்று பயன்படுத்த முடியாது.

விசைப் படகு (றோளர்படகு) எனச் சொல்லப்படும் பெரிய படகுகளிலேயே இந்த வலையை பயன்படுத்த முடியும். சுருக்குமடி வலை மற்றும் றோளர் படகு வாங்க ஒன்றரைக் கோடி இரண்டு கோடி ரூபாய் வரை முதலீடு தேவைப்படும்.

இந்த றோளர் படகுகளையும் அதில் பயன்படுத்தும் சுருக்கு வலை அல்லது இரண்டை மடி வலைகளையும் சாதாரண தமிழக மீனவர்களால் கொள்வனவு செய்ய முடியாது. தமிழ்நாட்டில் அமைச்சர்களும் அரசியல்வாதிகளும் பெரும் முதலாளிகளுமே றோளர் படகுகளை கொள்வனவு செய்து ஏழைத் தொழிலாளர்களை கூலிக்கு அமர்த்தி இத்தொழிலை செய்து வருகின்றனர்.

றோளர் படகுகளில் இலங்கை கடல் எல்லையில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் அடிக்கடி கைது செய்து வருகின்றனர். கைது செய்யப்படும் தமிழக மீனவர்கள் யாரும் றோளர் படகு உரிமையாளர்கள் கிடையாது. அவர்கள் கூலிக்காக தொழில் செய்யும் தொழிலாளர்கள்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

தருமபுரம் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான தியாக ராசா சஞ்சீவன் (வயது-36) என்பவரே இவ்வாறு உயிழந்துள்ளார்.

காயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (4-7,9,316)




## யாழில் கோர...

வீதியில் முட்டாஸ் கடைச் சந்திக்கு அருகாமையில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாண நகர் பகுதியை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனும் யாழ் நகரை நோக்கி பயணித்த கனரக வாகனமும் மோதியே விபத்து இடம்பெற்றுள்ளது.

மீசாலையைச் சேர்ந்த இராஜ ரட்ணம் அபிதாஸ் என்கிற 29 வயதானவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணப் பொலிஸார் கனரக வாகன சாரதியை கைது செய்துள்ளதுடன் சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதுடன், விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-7,9,33,104)

## மத நல்லிணக்...

ளார்.

தற்போதைய அரசாங்கத்தை சீர்குலைக்கும் வகையில் பல்வேறு தரப்பினர்களினால் இவ்வாறான செயற்பாடுகள் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருவதாக ஜனாதிபதிக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைய இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அலுவலக பிரதானி, தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து நாட்டு மக்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்தி நாட்டை மீண்டும் வீழ்ச்சியடையச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய புதிய பொலிஸ் குழு மிக விரைவில் ஸ்தாபிக்கப்படும் என சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் நடாஷா எதிரிசூரிய ஆகியோர் மதங்கள் தொடர்பில் கூறிய கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7,9)

## 843...

வகையான பொருட்களுக்கு அந்த பொருட்களை இறக்குமதி செய்யும் போது பொருட்களின் மொத்த மதிப்புக்கு சமமான 'பண வரம்பு தேவை' கட்டுப்பாட்டை நீக்கியுள்ளது.

இந்த 843 பொருட்களில் கையடக்கத் தொலைபேசிகள், குளிர்சாதனப் பெட்டிகள், மின் விசிறிகள், பழங்கள் உள்ளிட்ட பல அத்தியாவசியப் பொருட்கள் உள்ளடங்குவதாகவும் இந்த தீர்மானத்தினால் எதிர்காலத்தில் பல அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைவடையும் எனவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (4-7,9)

## சிறப்பாக...

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின் தீர்த்தம் எடுக்கின்ற உற்சவத்திற்காக தீர்த்தக்குடம் முல்லைத்தீவு பெருங்கடலை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டு கடல் தீர்த்தம் எடுக்கப்பட்டது.

அந்த வகையிலே தீர்த்தம் எடுப்பதற்காக முள்ளியுவளை காட்டா விநாயகர் ஆலயத்திலே விநாயகருக்கான வழிபாடுகளை தொடர்ந்து அம்மனுக்கான வழிபாடுகள் இடம்பெற்று அங்கிருந்து தீர்த்தக்குடம் தீர்த்தம் எடுப்பதற்காக முல்லைத்தீவு தீர்த்தக்கரை கடற்கரை நோக்கி கொண்டு செல்லப்பட்டு அங்கு தீர்த்தம் எடுக்கப்பட்டுள்ளது

முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்திலே வழிபாடுகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து தீர்த்தக்குடம் அங்கு இருக்கின்ற பிரதான சிவாச்சாரியார் அவர்களால் உரிய சம்பிரதாய கிரிகைகளை தொடர்ந்து பாரம்பரியமாக தீர்த்தம் எடுக்கின்றவர்களிடத்திலே கொடுக்கப்பட்டு தீர்த்தக்குடம் பாரம்பரியமாக செல்கின்ற பாதைகள் ஊடாகமுல்லைத்தீவு தீர்த்தக்கரை பெருங்கடலை நோக்கி கொண்டு செல்லப்பட்டு அங்கு தீர்த்தம் எடுக்கப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை வேளையில் அங்கே உப்பு நீரிலே விளக்கெரிக்கின்ற அதிசயத்தை பக்தர்கள் காணக் கூடியதாக இருக்கும். இதனைத் தொடர்ந்து காட்டா விநாயகர் ஆலயத்தில் தொடர்ச்சியாக மடை பரவி பூசைகள் இடம்பெற்று எதிர்வரும் 4ஆம் திகதி காட்டா விநாயகர் ஆலய பொங்கல் நிகழ்வும் அதனை தொடர்ந்து ஐந்தாம் திகதி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தினுடைய வருடாந்த பொங்கல் உற்சவமும் மிகச் சிறப்பாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7,9)

## முத்திரை...

பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளை பரிசோதித்தபோது அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை பயன்படுத்திய 5 வியாபாரிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் இனிவரும் காலங்களில் நிறுவை அல்லது அளவை, நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களை வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தும் வியாபார நிலையங்களிலும் திடீர் பரிசோதனை மேற்கொள்ளபடவுள்ளது. (4-7,9)

மெகா பவர்
திகதி 29/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1477
I 16 27 30 56 66

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 29/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1584
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 5 6 4 7 5 9

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.29
சீட்டிழுப்பு இலக்கம் 438
கடகம் 01 39 40 60 கடகம்

தன நிதானய
திகதி -2023.05.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1159
D 03 23 30 64

மஹஜன சம்பத
திகதி 2023/05/29
சீட்டிழுப்பு இலக்கம் 5129
Z 0 7 2 7 6 6

கொவிசெத
திகதி 2023.05.29
சீட்டிழுப்பு இலக்கம் 3371
H 26 43 55 66

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2103 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.05.29 தினம் திங்கட்கிழமை
A 27 30 35 47
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 103,466,659/-

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.29
வெற்றி வாரம்: 4264
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.47,249,192.70
வெற்றி இலக்கங்கள் 02 17 68 70 Z

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,912,313.40
வெற்றி இலக்கங்கள் 02 09 32 58 கன்னி
திகதி 2023-05-29
வெற்றி வாரம் 3815
வர்ணம் மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,282,460/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 22 18 29 54 57
1279
2023.05.29 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 333,686,986.20

ஜயோதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.29
வெற்றி வாரம்: 1925
வர்ணம்: செம்மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.43,370,034.00
வெற்றி இலக்கங்கள் 10 18 22 61 X

அட கோடிபதி
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 1929
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2023.05.29
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.50,450,395.20
வெற்றி இலக்கங்கள் 07 33 55 59 O

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு, கிழ...

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனின் பிறந்தநாளை முன்னிட்டு அற நிதிய சபை நடத்தும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேராசிரியர்கள், சமுகப்பொறுப்பாளர்கள், சான்றோர்கள் ஒன்றுகூடி நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் சிந்திக்க வேண்டும். பேராசிரியர்கள் நல்லதை நினைப்பார்கள் என்றால் வடக்கு கிழக்கு மலையகத்தை கல்வியால் உச்சத்துக்குக் கொண்டு வரமுடியும்.

பல்கலைக்கழகத்திற்குள் மாத்திரம் பேராசிரியர்கள் இருக்காது சமூகத்திற்குள் இறங்கி சமூகத்தைப் பாதுகாக்க முன் வரவேண்டும். யாழ்.பல்கலைக்கழகத்தில் தற்போதுள்ள துணைவேந்தரின் காலத்தில் பல பேராசிரியர்கள் உருவாகி வருகின்றார்கள்.

இவ்வாறாக வருகின்ற அனைத்துப் பேராசிரியர்களும் ஒன்றிணைந்து சமுதாயத்தை முன்னேற்றவேண்டும். அது மட்டுமன்றி துணைவேந்தர் பல்கலைக்கழகத்திற்கு புதிய பாடத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்றால் அதற்கு காணிகள் கட்டடங்கள் இல்லை என்று அந்தத் திட்டத்தினை கைவிடாது தெல்லிப்பளை தேவஸ்தானத்திடம் தொடர்பு கொண்டால் நாம் அதற்கான வழி அமைத்துத் தருவோம்.

யாழ்ப்பாணத்திற்கு திருமண மண்டபங்கள் போதும் இனிகல்வி மண்டபங்கள் உருவாக வேண்டும். தொழிற்சாலைகள் உருவாகவேண்டும். இதன்மூலம் கல்வி இடைவிலகிய மாணவர்கள் வேலைவாய்ப்பில்லாதவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கி வேலை வாய்ப்புக்களை வழங்க முன்வர வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4,7,9)

## 350 மில்...

பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய சவால்கள் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை, நிலையான மீட்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கி முன்னேறும் போது, இலங்கையுடன் நிற்க ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதிபூண்டுள்ளதாக அதன்தலைவர் மசட்சுகு அசகாவா தெரிவித்துள்ளார்.

உள் மற்றும் வெளி சமத்துவமின்மைக்கான காரணங்களை நிவர்த்தி செய்வதற்கும் நிலையான கடன் பாதைக்கு திரும்புவதற்கும் இலங்கை துணிச்சலான சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (4,7,9)

## கதிர்காமத்...

யக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கைதடி மத்திய வீதியைச் சேர்ந்த 74 வயதுடைய இராசையா சிவலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 6ம் திகதி கதிர்காமத்துக்கான பாதயாத்திரை யாழ். சந்நிதி முருகன் ஆலயத்தில் ஆரம்பித்த நிலையில் அக்குழு நேற்றுமுன்தினம் இரவு மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை வந்தடைந்தது. பாதயாத்திரிகள் ஆலய வளாகத்தில் தங்கியிருந்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று காலையில் குறித்த நபர் பனிஸ் உண்ட பின்னர் அமர்ந்திருந்த நிலையில் திடீரென நிலத்தில் சரிந்து வீழ்ந்ததையடுத்து அவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சடலமானது பிரேத பரிசோதனைக்காக மட்டு. போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(4,104)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15774)
076 825 7716 (ஆகாஸ்)

## கொழும்பு துறைமுக வளாகத்தில் ஏலக்காய் திருடிய மூவர் கைது

கொழும்பு துறைமுக வளாகத்துக்குள் வைக்கப்பட்டிருந்த கொள்கலனை உடைத்து ஏலக்காய் பெட்டிகள் ஒன்பதை திருடிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட ஏலக்காய் தொகையின் பெறுமதி 25 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இப்பலோகம மற்றும் பண்டாரகம பகுதிகளைச் சேர்ந்த 39 வயதுக்கு உட்பட்ட மூவரே கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களால் திருடப்பட்ட ஏலக்காய் தொகை வைக்கப்பட்டிருந்த கொள்கலன் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் கைதான சந்தேகநபர்களை புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4,7,9)

## ஊடகங்களின் செயற்பாடுகளில் தலையிட மீண்டும் சட்டமூலம் இயற்ற முயற்சி

(கொழும்பு)

அரசாங்கத்தினால் ஊடகங்களின் செயற்பாடுகளில் தலையீடு செய்வதற்கான சட்டங்களினை இயற்றும் முயற்சி மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சில அமைச்சர்களின் கருத்துக்கள் அதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே உள்ளது.

ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில், இலத்திரனியல் ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்ற உபகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதன் தலைவராக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் இச் சட்டமூலம் தொடர்பில் கருத்துரைத்த நீதியமைச்சர் இவ் அதிகார சபை தொடர்பிலான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் ஊடக நிறுவனங்களுடனான கலந்துரையாடலின் பின் ஓரிரு வாரங்களிற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அவசர அவசரமாக கொண்டுவரப்படும் இச் சட்டமூலத்தின் ஆவணங்கள் இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பதோடு ஊடகத்துறை சார்ந்த எவர்க்கும் இச் சட்டமூல உருவாக்கம் தொடர்பில் எதுவித தகவல்களும் பகிரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஊடகங்களுக்கான கட்டுப்பாடுகளினை விதிக்க அரசாங்கம் முயற்சிக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவல்ல என்பதுடன் கடந்த ஒரு தசாப்த காலமாகவே இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில்,

அண்மையில் முன்வைக்கப்பட்ட பயங்கரவாத சட்டமூலத்திலும் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான சரத்துக்கள் காணப்படுகின்ற நிலையில் மீண்டும் ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலத்தினை கொண்டுவருவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4,7,9)

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
கல்யாண மாலை பதவி வெற்றிடம்
முகாமைத்துவ உதவியாளர் பெண்கள்
(தமிழ் ரைப்பிங் தெரிந்தவர்கள்)
குறிப்பு : யாழ்ப்பாண நகருக்கு அண்மையாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.
தொடர்புகளுக்கு: 076 097 3127

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.
◆16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
◆வட்டுக்கோட்டை மாவடி சந்தியில் இருந்து மூளாய் செல்லும் பிரதான வீதியில் இருந்து 200m தூரத்தில் (உபவில் வீதி பிரதான காபற் வீதி முகப்புடன்
◆786 வழி இலக்க தனியார் CTB பேருந்துகள் செல்லும் வீதியில் இருந்து 200m தூரத்தில்
◆குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
◆நன்னீர் ஊற்று நிலம்.
◆மாவடி சந்தியில் இருந்து 800m தூரத்தில். (15776)
076 739 0413
076 733 6093

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்கு
■பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
■புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
■இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
■பரப்பு ஒன்றின் விலை 120,000 (ஒரு இலட்சத்து இருபதாயிரம்) (15776)
076 733 6047
076 755 8606

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் இளவாலையில் 30 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.
● இளவாலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
● 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
● நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
● இளவாலை சந்தியில் இருந்து 1 km தூரம்.
● திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள்,சுற்றுலா விடுதிகள், வீடுகள்
● அமைக்க உகந்த இடம்.
● பரப்பு ஒன்றின் விலை 800,000 (எட்டு இலட்சம்) (15776)
076 165 3129
076 911 9371

வேலையாள் தேவை
கிளிநொச்சியில் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கும் வீடு, காணியைப் பராமரிக்கக் கூடிய ஒருவர் தங்கி நின்று வேலை செய்வதற்கு தேவை.
வயது 40—60 இற்கு இடைப்பட்டவர்.
தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளரின் அத்தாட்சி கடிதமும் தேவை. (C-6642)
077 190 3165

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொடிகாமம் (C-6643)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ONLINE APPLICATIONS
✓VISA APPOINTMENTS
✓PASSPORT APPLICATION
✓POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-6643)


Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org